வழங்குவதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலேயே ஆயிரம் ரூபாயை திருநங்கைகளுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகளை தலைமைச் செயலகத்திற்கே வரவழைத்து, அவர்களுக்கு தன்னுடைய திருக்கரங்களாலேயே ஆயிரம் ரூபாயை வழங்கினார்கள்.

2012–2013 ஆம் ஆண்டில் 40 வயதிற்கு மேற்பட்ட 500 திருநங்கைகளுக்கும், 2013–2014 ஆம் ஆண்டில் 740 திருநங்கைகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான் ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் மகிழ்ச்சியாக அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

64—

தோட்டக்கலைக் கல்லூரி

***37323—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்கரன்கோவில் தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்க தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

முற்பகல் 10—40

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு. கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி. விவசாயப் பெருமக்கள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்ற வாக்கிற்கிணங்க, நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயப் பெருமக்களுக்கு முதன்முதலாக நிவாரணம் வழங்கி, விவசாயப் பெருமக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியானது விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதி. 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழக்கூடிய மக்கள் கடந்த ஆண்டிலே விவசாயத்திலே பெரும் நஷ்டம் ஏற்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை உணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சங்கரன்கோவில் இடைத் தேர்தலின்போது அறிவித்ததுபோல, சங்கரன்கோவில் மக்கள் சங்கடம் இல்லாமல் வாழ சகல வசதிகளையும் செய்து கொடுப்பேன் என்ற வாக்கிற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சிக்காக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சங்கரன்கோவிலில் வாழக்கூடிய விவசாயப் பெருமக்கள் அழிந்துபோகாத அளவிற்கு மாற்றுத் தொழில் ஒன்றும், கோழிப் பண்ணை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுத்து, இங்குள்ள மக்களின் நல்லதொரு விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்கள்.

மேலும், இங்கு வற்றல் அதிகமாக உற்பத்தியாகிறது என்பதை உணர்ந்து அதைச் சேமிப்பதற்காக குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்றும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதியிலே 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேலும், அதிகமாக வாழை, கரும்பு, எலுமிச்சை, பூ போன்ற பொருட்கள் உற்பத்தியாகக்கூடிய பகுதி. காய்கறிகள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேபோல, எலுமிச்சை உற்பத்தியிலே, மாநிலத்திலேயே இரண்டாவது இடத்தையும், வாழை உற்பத்தியிலே மாநில அளவிலே இரண்டாவது இடத்தையும், நெல்லி உற்பத்தியிலே முதல் இடத்தையும் எங்களுடைய திருநெல்வேலி மாவட்டம் பெற்று வருகிறது.

அதேமாதிரி தோட்டக்கலையைச் சார்ந்த விவசாயப் பொருட்கள் அனைத்தும் சங்கரன்கோவில் பகுதியிலே அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏறக்குறைய 1,600 எக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சங்கரன்கோவில் தொகுதியிலே தொழில்நுட்பக் கல்லூரிகள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையும் உள்ளது. எனவே, இதை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அத்தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கோவை, பெரியகுளம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், உதகமண்டலம், திண்டுக்கல் மாவட்டத்திலே கொடைக்கானல், தடியன்குடிசை, சேலத்திலே ஏற்காடு, கடலூரிலே பாலூர், கன்னியாகுமரி மாவட்டத்திலே தோவாளை மற்றும் பேச்சிப்பாறை ஆகிய இடங்களிலே தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு காய்கறிகள், பழ வகைகள், மருத்துவக் குணம் நிறைந்த தோட்டக்கலைப் பயிர்கள், நறுமணமூட்டும் மற்றும்

2013 அக்டோபர் 30]

மலைப் பயிர் வகைகள் ஆகியவற்றில் உயர் விளைச்சல் தரும் இரகங்கள் மற்றும் வேளாண்மை முறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி முடிவுகள் தமிழகம் முழுவதும் பொருந்தக்கூடியவையாகும். இது தவிர, சங்கரன்கோவிலை உள்ளடக்கிய திருநெல்வேலிக்கு மிக அருகில் உள்ள கிள்ளிகுளத்தில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு தனியே தோட்டக்கலைத் துறையும்கூட செயல்பட்டு வருகிறது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு அருகில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையமும், பேச்சிப்பாறையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் இயங்கி வருவதால் சங்கரன்கோவில் பகுதி விவசாயிகள் இந்த ஆராய்ச்சி நிலையங்களை அணுகி, தொழில்நுட்ப விவரங்களைப் பெற்று பயனடையலாம். மேலும், அந்தந்தப் பகுதியில் இயங்கும் வேளாண் அறிவியல் மையங்களைக்கூட விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, சங்கரன்கோவில் தொகுதியிலே புதிய மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்க தற்போது கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

முற்பகல் 10—45

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கரன்கோவில் பகுதிக்குட்பட்ட விவசாயப் பெருமக்கள் எலுமிச்சையை அதிகமாக விளைவிக்கிறார்கள். அதிலும் முக்கியமாக, ஆர்கானிக் எலுமிச்சை என்ற முக்கியத்துவம் வாய்ந்த எலுமிச்சை இரகம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இது தமிழ்நாடு முழுவதும் பரவலாக எல்லோராலும் விரும்பி வாங்கப்படுகிறது. அதேபோல, நெல்லி உற்பத்தியில் மாநிலத்தில் திருநெல்வேலி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. ஆர்கானிக் எலுமிச்சையை கோடைக்காலத்தில் ‘டைபாக்’ என்ற நோய்

தாக்குகிற ஒரு சூழ்நிலை உள்ளது. நீண்டகாலமாக 'டைபாக்' நோய்க்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்கான தீர்வு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பாக ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் நேர்வில் அப்பகுதி விவசாயப் பெருமக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். இந்தக் கோரிக்கை மிகவும் முக்கியமானது. இந்தக் கோரிக்கையை முன்வைத்து அப்பகுதி விவசாய மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி அப்பகுதியின் அருகிலே ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகள் இருப்பதனால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், 100 ஏக்கர் நிலம் தேவை. மேலும் ரூ.50 கோடி நிதியும் தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் மனதில்கொண்டு வருகின்ற காலகட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.